# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

***********************

### இந்திய தேர்தல் ஆணையகத்தால் முன்னெடுக்கப்படும் சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கை தூதுக்குழு பங்கேற்பு

2024 லோக்சபா தேர்தல்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை ஒழுங்கமைத்துள்ளதுடன் 2024 மே நான்காம் திகதி முதல் மே 9 ஆம் திகதி வரை இத்திட்டம் நடைபெறுகின்றது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, குறிப்பாக இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் சட்ட மறுசீரமைப்புக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உறுப்பினர்கள் எட்டு பேர் உள்ளடங்கலாக, இலங்கையைச் சேர்ந்த பத்துப் பேர் அடங்கிய தூதுக் குழுவினர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

2. குறித்த சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் திட்டமானது சர்வதேச தேர்தல் முகாமைத்துவ அமைப்புகளுக்கான ஓர் அரங்காக காணப்படும் அதேவேளை இந்திய தேர்தல் முறைமையின் பலம் தொடர்பாக உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளவும், உலகின் பாரிய ஜனநாயக நாட்டின் சிறந்த அனுபவங்களை கற்றுக் கொள்வதற்குமான சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றது. இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் 2014-2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற லோக்சபா தேர்தல்களின் போதும் இந்திய தேர்தல் ஆணைக்குழுவினரால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. இந்தியாவின் தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக சர்வதேச தேர்தல் கண்காணிப்பு மையங்கள் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்கள் அறிந்து கொள்வதனை இலக்காகக் கொண்டு இச்செயல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

3. இந்திய தேர்தல்கள் தொடர்பான ஒட்டுமொத்த நோக்கு, இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் மற்றும் வாக்கு கணக்கிடும் இயந்திரம், ஏனைய தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள், ஊடக & சமூக ஊடக வீச்செல்லை குறித்து விளக்கமளிக்கும் அமர்வுகளும் இத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன. பல்வேறு வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்புகளை பார்வையிடுவதற்கும் அதேபோல தேர்தல் நடைமுறைகளை அவதானிக்கவும் இந்நிகழ்ச்சி திட்டத்தில் பங்குகொள்ளும் உறுப்பினர்கள் குழுக்களாக பல்வேறு மாநிலங்களுக்கும் பயணிக்க உள்ளனர்.

4. 2024 சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் நிகழ்ச்சி திட்டத்தில் பங்கு கொள்வதற்காக 55 தேர்தல் முகாமைத்துவ அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு இந்திய தேர்தல் ஆணைக்குழுவினரால் இவ்வருடம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சி திட்டத்தில் பங்குகொள்ளும் உறுப்பினர்கள் தேர்தல் நடைமுறைகளில் பங்கு கொண்டிருக்கும் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி நேரடி அனுபவத்தினை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவதனால் தேர்தல் முகாமைத்துவத்தில் ஒத்துழைப்பு மற்றும் சிறந்த புரிதலை ஏற்படுத்துவதற்கு இது வழிவகுக்கும்.

5. இலங்கை பிரதிநிதிகள் இத்திட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றமையானது, இருதரப்பு உறவினை வலுப்படுத்தல் மற்றும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தேர்தல் முறைமை குறித்த அறிவினையும் அனுபவத்தினையும் பகிர்ந்துகொள்வதற்குமான அர்ப்பணிப்பினை சுட்டிக்காட்டுகின்றது. இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாக, பிராந்திய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் ஜனநாயக கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கும் வகையில், இரண்டு நாடுகளும் தத்தமது தேர்தல் நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் உள்ளடக்கம் போன்றவற்றை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு செயல்படுகின்றன.

************

**கொழும்பு**

**05 மே 2024**